# செயலாற்றுகை அறிக்கை - 01 ஆம் காலாண்டு
# 2019 ஜனவரி முதல் மார்ச் வரை

## அறிமுகம்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, 1996 ஆம் ஆண்டில், 1996 இன் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் ஊடாக தாபிக்கப்பட்டது. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்ட ரீதியான அமைப்பு மற்றும் செயற்பாட்டுக் கோட்பாடுகள் அந்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.மனித உரிமைகள் ஆணைக்குழு பற்றி இலங்கை அரசியல் யாப்பில் குறிப்பிடப்பட்டிருப்பினும் அது அரசியல் யாப்பின் கீழ் முறையாக தாபிக்கப்படவில்லை. ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அரசியல் யாப்பின் ஏற்பாடுகளின் கீழ் நியமிக்கப்படுகின்றனர். அடிப்படை உரிமைகள் மற்றும் மனித உரிமைகளுடன் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகார எல்லையானது சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அடிப்படை உரிமைகள் என்றால், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் III ஆவது அத்தியாயத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள சில சிவில் மற்றும் அரசியல் உரிமைகளைப் போன்றே பொருளாதார, சமூக மற்றும் கலாசார ரீதியிலான உரிமைகளுமாகும். மனித உரிமைகள் சர்வதேச சட்ட முறைமைகளினுள்ளேயே விபரிக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் அலுவல்களாவன:

- அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் பின்பற்றப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக நடைமுறைகளுடன் தொடர்பான முறைப்பாடுகள் அல்லது அடிப்படை உரிமைகள் மீறல் அல்லது நிகழவிருக்கும் மீறல்கள் சம்பந்தமாக கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளை பரிசீலணைக்குட்படுத்தல் மற்றும் விசாரணை செய்தல்.

- அடிப்படை உரிமைகள் விருத்தி மற்றும் பாதுகாத்தல் தொடர்பான சட்டங்கள் மற்றும் நிர்வாக ஆணைகள் மற்றும் நடைமுறைகளை தயாரிக்கும்போது அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் ஒத்துழைப்பு வழங்குதல்.

- தேசிய சட்ட முறைமை மற்றும் நிர்வாக முறைமை சர்வதேச மனித உரிமைகள் ஒழுங்கு விதிகள் மற்றும் தரத்துடன் இயைந்து செல்வதனை உறுதி செய்வதற்காக அரசாங்கத்திற்கு சிபாரிசுகளை முன்வைத்தல்.

- சர்வதேச ஒப்பந்தங்கள் மற்றும் ஏனைய சர்வதேச மனித உரிமைகள் சாசனங்களில் கைச்சாத்திடல் அல்லது இணக்கப்பாட்டை வெளிப்படுத்தலுடன் தொடர்பாக அரசாங்கத்திற்கு ஆலோசனைகளை வழங்குதல்.

- மனித உரிமைகள் தொடர்பான அறிவை விருத்தி செய்தல் மற்றும் மனித உரிமைகளுடன் தொடர்புடைய கல்விக்கான வாய்ப்பை அளித்தல்(1996 இன் 21 ஆம் இலக்க சட்டத்தின் 10 ஆவது பிரிவு)

ஆணைக்குழு 151 பேர்களைக் கொண்ட பணியாட் தொகுதியுடன் செயற்பட்டது. ஆணைக்குழுவின் அலுவல்களை நடைமுறைப்படுத்துவதற்காக விசாரணை மற்றும் புலனாய்வு, கல்வி மற்றும் விசேட திட்டங்கள், ஆராய்ச்சி மற்றும் மேற்பார்வை, நிர்வாகம் மற்றும் நிதி ஆகிய பிரிவுகளைப் போன்றே 10 பிராந்திய அலுவலகங்களை (அம்பாறை, அனுராதபுரம், பதுளை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கல்முனை, கண்டி, மாத்தறை, திருகோணமலை மற்றும் வவுனியா) கொண்டமைந்துள்ளது. அனைத்துப் பிரிவுகளும் பணிப்பாளரொருவரின் கீழும் சகல பிராந்திய அலுவலகங்களும் தலைவர் மற்றும் / அல்லது ஆணையாளரொருவர் / ஆணையாளர்களால் மேற்பார்வைக்குட்படுத்தப்படுகின்றது.

இந்தக் காலப் பகுதியினுள் ஆணைக்குழுவினால் அநேகமான செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், அந்த செயற்பாடுகள் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பலவந்தமாக காணாமலாக்கப்படலுடன் தொடர்பாக தனது செயற்பாடுகளை ஒருங்கிணைப்புச் செய்யுமுகமாக புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுவதற்கான வாய்ப்பு தொடர்பாக ஆராய்வதற்காக ஆணைக்குழுவினால் இந்தக் காலாண்டினுள் காணாமற்போனோர் சம்பந்தமான அலுவலகத்துடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டது.

## தலைமை அலுவலகம் - முறைப்பாடுகள் பொழிப்பு

| | |
|---|---|
| தலைமை அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 996 |
| இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விடயப் பரப்பின் கீழான முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 338 |
| இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விடயப் பரப்பின் கீழ் உள்ளடக்கப்படாத மற்றும் பொருத்தமான நடவடிக்கைகளுக்காக ஏனைய நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை (தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ள முடியாத) | 618 |
| தகவல்கள் கிடைக்க வேண்டிய முறைப்பாடுகள் | 40 |

## தலைமை அலுவலகத்தின் ஊடாக விசாரணை நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்ட முறைப்பாடுகள்

| அலுவல்கள் நிறைவு செய்யப்பட்ட முறைப்பாடுகளை வகைப்படுத்தல் | விசாரணை நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|
| பரிந்துரைகள் வழங்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 16 |
| இணக்கப்படுத்திய முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 14 |
| ஏனைய காரணங்களினால் நிறைவு செய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை (வாபஸ் பெறல், ஆர்வம் காட்டாமை, அடிப்படை உரிமைகள் மீறப்படாமை) | 781 |

## பிராந்திய அலுவலகங்கள் - முறைப்பாடுகள் பொழிப்பு

| முறைப்பாடுகள் பொழிப்பு | அம்பாறை | அனுராதபுரம் | பதுளை | மட்டக்களப்பு | யாழ்ப்பாணம் | கல்முனை | கண்டி | மாத்தறை | திருகோணமலை | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை** | 43 | 157 | 64 | 96 | 80 | 50 | 135 | 149 | 32 | 68 |
| **விடயப் பரப்பின் கீழான முறைப்பாடுகளின் எண்ணிக்கை** | 33 | 132 | 55 | 86 | 80 | 49 | 143 | 127 | 30 | 64 |
| **விடயப் பரப்பின் கீழ் உள்ளடக்கப்படாத முறைப்பாடுகளின் எண்ணிக்கை** | 10 | 25 | 09 | 10 | - | 01 | 15 | 22 | 2 | 04 |
| **ஏனைய நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்ட முறைப்பாடுகள்** | - | - | - | 79 | 05 | - | - | - | - | - |
| **இணக்கப்படுத்திய முறைப்பாடுகளின் எண்ணிக்கை** | 01 | 51 | 05 | 07 | 28 | 23 | 140 | - | | 22 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | 1 | |
| பரிந்துரைகளுக்காக தலைமை அலுவலகத்திற்கு அனுப்பிய முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 03 | 08 | 8 | -- | 01 | - | 01 | 4 | - | 03 |
| பிராந்திய அலுவலகங்களை வினவிய நபர்களின் எண்ணிக்கை | 124 | 221 | 108 | 175 | 444 | 135 | 251 | 346 | 166 | - |
| நிறைவு செய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 26 | 144 | 31 | 26 | 30 | 60 | 144 | 137 | 33 | 75 |

**<u>தன்னிச்சை நிகழ்வுகள் (ஞரழ.ீ.ஆழவழ) முறைப்பாடுகளை வழிநடாத்துதல்</u>**

இந்தக் காலாண்டில் புலனாய்வு மற்றும் விசாரணைப் பிரிவு ஊடாக ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆவது பிரிவின் பிரகாரம் ஆணைக்குழு தனது வழிநடாத்தலின் கீழ் 08 விசாரணைகளை மேற்கொண்டதுடன், அது பற்றிய விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| | நிகழ்வின் தன்மை | முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | சித்திரவதை செய்தல் | 04 |
| 02 | கைது செய்தல் மற்றும் தடுத்து வைத்தல் | 01 |
| 03 | கைது செய்யப்பட்டிருக்கும்போது மரணித்தல் | 02 |
| 04 | பலவந்தமாக காணாமற் செய்யப்படல் | 01 |

மேலே குறிப்பிடப்பட்ட விசாரணைகளுடன் தொடர்புடைய தன்னிச்சை நிகழ்வுகள் பற்றிய பொழிப்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- HRC/Suo/Motu/01/19இன் கீழ் ஈ.ஏ.பீ.சில்வா என்பவர் 2019.01.07 ஆம் திகதி வெலிக்கடை சிறைச்சாலையில் மரணித்தமை தொடர்பான விசாரணை அரும்பிக்கப்பட்டுள்ளது.

- HRC/MT/Suo/Motu/01/19இன் கீழ்2019.01.23 ஆம் திகதி அல்லது அண்மித்த திகதியில் ரத்கம பொலிஸ் பிரிவில் இரண்டு நபர்கள் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டு எரிக்கப்பட்டமை தொடர்பாக ஊடகங்களின் ஊடாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்களுக்கமைய விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் இந்த நிகழ்வுடன் தொடர்பாகHRC/MT/79/19, HRC/MT/576/19,HRC/MT/581/19ஆம் இலக்க முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அந்த முறைப்பாடுகளுடன் தொடர்புபடுத்தி அடுத்தகட்ட விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

- HRC/Suo/Motu/02/19 இன் கீழ் குருவிட்ட சிறைச்சாலையில் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும்போது 2018.12.22 ஆம் திகதி அல்லது அண்மித்த திகதியில் எம்.எஸ்.ரம்யசிரி அல்லது ஜோன் சீனா என்பவர் தூக்குப்போட்டு இறந்தமை சம்பந்தமாக விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- HRC/Suo/Motu/03/19இன் கீழ் 2019.01.21ஆம் திகதி அல்லது அண்மித்த திகதியில் அவிஸ்ஸாவலை புவக்பிட்டிய ஜனவிரு புனர்வாழ்வு நிலையத்தில் சிறிய வயதையுடைய மொஹமட் அசாட் எனும் நபருக்கு சித்திரவதை செய்தமை சம்பந்தமாக ஆணைக் குழுவுக்கு கிடைத்த தகவலுக்கமைய விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- HRC/Suo/Motu/04/19மற்றும்; HRC/Suo/Motu/08/19இன் கீழ் சுதத் சில்வா என்ற கைதி வெலிக்கடை சிறைச்சாலையில் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டமை சம்பந்தமாக ஆணைக் குழுவுக்கு கிடைத்த தகவலுக்கமைய விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- HRC/Suo/Motu/05/19இன் கீழ் சமூக ஊடகங்களின் ஊடாக முன்வைக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் 2019.03.13 ஆம் திகதி அல்லது அண்மித்த திகதியில் ரிதீகம பொலீஸ் நிலையத்தின் உத்தியோகத்தர் ஒருவரால் நபரொருவரை சித்திரவதைக்குட்படுத்தி கைது செய்த நிகழ்வு சம்பந்தமாகவிசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- HRC/Suo/Motu/06/19இன் கீழ் 2019.03.13 ஆம் திகதி அல்லது அண்மித்த திகதியில் பாராளுமன்ற சுற்று வட்டத்திற்கருகில் பல்கலைக்கழக மாணவர் சங்கத்தினால் நடாத்தப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் காரணமாக அதன் அழைப்பாளர் மஹில் பண்டார தெஹிதெனிய என்பவரை கைது செய்தமை மற்றும் அங்கு ஏற்பட்ட நிலைமை சம்பந்தமாக 2019.03.14 ஆம் திகதி 'மவ்பிம'மற்றும் 'தினமின' செய்திப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட செய்திகளின் அடிப்படையில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- HRC/Suo/Motu/07/19இன் கீழ் 2019.03.22 ஆம் திகதி அல்லது அண்மித்த திகதியில் புத்தளம் பிரதேசத்தில் நடைபெற்ற பொது மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை கலைக்கும்போது பிரதேசத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலீஸ் மா அதிபர் மூன்று நபர்களை தாக்கியமை சம்பந்தமாக ஊடகங்களின் ஊடாக வெளியிடப்பட்ட தகவல்களின் அடிப்படையில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## விசேட மேற்பார்வைகள்

| திகதி | தலையீட்டை மேற்கொண்டமைக்கு ஏதுவான காரணங்கள் |
|---|---|
| 2019.01.07 | HRC/1357/18/D/R& Mஆம் இலக்க முறைப்பாடு சம்பந்தமாக மேலதிக தகவல்களை அறிந்து கொள்வதற்கு மற்றும் தற்போதைய முன்னேற்றம் சம்பந்தமாக வலப்பனை பிரதேச சபை மற்றும் பிரதேச செயலகத்திடமிருந்து விடயங்களை அறிந்து கொள்வதற்காக இந்தக் கலந்துரையாடல்ட மேற்கொள்ளப்பட்டது. |
| 2019.01.10 | HRC/2342/18/SUO/MOTU/R & Mஆம் இலக்கத்தின் கீழ் சுய தலையீடு மேற்கொள்ளப்பட்ட இந்தப் பிரச்சினையுடன் தொடர்பாக மீளாய்வுக் கூட்டமொன்று நடாத்தப்பட்டது. அதற்கு தபால் அமைச்சு,அஞ்சல் திணைக்களம், சப்ரகமுவ மாகாண பிரதி அஞ்சல் மா அதிபர், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு போன்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். |
| 2019.01.11 | HRC/1638/18/D/R & Mஆம் இலக்க முறைப்பாடு மோட்டார் வாகன சாரதிகளால் மேற்கொள்ளப்படும் தவறுகளுக்காக அறவிடப்படும் தண்டப் பணத்தை அதிகரிப்பதற்கு எதிரான முறைப்பாடாகும். அது, இலங்கை சுய தொழிலாளர்களின் முச்சக்கர வண்டி சங்கம், இலங்கை மாவட்டங்களுக்கிடையிலான பாடசாலை மாணவர்கள் போக்குவரத்து சங்கம், உணவக உரிமையாளர்கள் சங்கம் மற்றும் அகில இலங்கை மோட்டார் சைக்கிளோட்டிகள் சங்களம் போன்ற சங்கங்களினால் முன்வைக்கப்பட்டதாகும். இது சம்பந்தமாக போக்குவரத்து அமைச்சு, வீதிப் பாதுகாப்பு சம்பந்தமான தேசிய சபை, மொரட்டுவை மாநகர சபை, பொலீஸ் திணைக்களம் போன்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் இந்தப் பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. |
| 2019.01.24 | HRC/2342/18/SUO/MOTU/R & Mஎனும் இலக்கத்தின் கீழ் சுய தலையீடு மேற்கொள்ளப்பட்ட இந்தப் பிரச்சினையுடன் தொடர்பாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுடன் விசேட கலந்துரையாடலொன்று நடாத்தப்பட்டது. |
| 2019.03.14 | HRC/2342/18/SUO/MOTU/R & Mஎனும் இலக்கத்தின் கீழ் சுய தலையீடு மேற்கொள்ளப்பட்ட இந்தப் பிரச்சினையுடன் தொடர்பாக தபால் அமைச்சு, தபால் திணைக்களம், சப்ரகமுவ மாகாண பிரதி தபால் மா அதிபர், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு ஆகியவற்றை தொடர்புபடுத்தி விசேட கலந்துரையாடலொன்று நடாத்தப்பட்டது. |
| 2019.03.28 | HRC/817/19 ஆம் இலக்க முறைப்பாட்டுடன் தொடர்பாக வாதித் தரப்பு மற்றும் பிரதிவாதித் தரப்பான மத்திய அதிவேகப் பாதை திட்டத்தின் இரண்டாம் கட்டம் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை போன்ற நிறுவனங்கள் அழைக்கப்பட்டன. இந்த முறைப்பாடு அபிவிருத்தி நடவடிக்கைகள் காரணமாக அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பிரதேச மக்களுக்கு ஏற்படும் சுகாதார ரீதியிலான அச்சுறுத்தல் தொடர்பாக முன்வைக்கப்பட்டதாகும். |

## தடுத்து வைக்கப்பட்டுள்ள இடங்களை சோதனைக்குட்படுத்தல் பற்றிய பொழிப்பு

| இடம் | தலைமை அலுவலகம் | பிராந்திய அலுவலகம் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | அம்பாறை | அனுராதபுரம் | பதுளை | மட்டக்களப்பு | யாழ்ப்பாணம் | கல்முனை | கண்டி | மாத்தறை | திருகோணமலை | வவுனியா |
| பொலீஸ் நிலையங்கள் | 176 | 17 | 10 | 45 | 27 | 52 | 16 | 96 | 44 | 19 | 53 |
| சிறைச்சாலைகள் | 06 | 02 | - | 2 | 06 | 04 | - | 02 | 1 | 02 | 01 |
| சிறுவர் பராமரிப்பு /சிறுவர் தடுப்பு இல்லங்கள் | 01 | 02 | - | - | 03 | - | 07 | 01 | 02 | - | - |
| முதியோர் இல்லங்கள் | - | 02 | - | - | - | - | 02 | - | - | - | - |
| புனர்வாழ்வு நிலையங்கள் | 2 | - | - | - | - | - | - | - | - | - | 01 |
| குற்றப் புலனாய்வு /பயங்கரவாத விசாரணைப் பிரிவு | 2 | - | - | - | - | - | 01 | - | - | - | 02 |
| அங்கவீனர் இல்லங்கள் | - | - | - | - | 01 | - | 01 | - | - | - | |
| விசேட | - | - | - | - | 02 | - | - | - | - | - | 01 |
| **மொத்தம்** | 187 | 23 | 10 | 47 | 39 | 56 | 27 | 99 | 47 | 21 | 58 |

## அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகள்

| **இலக்கம்** | **முறைப்பாட்டு இல.** | **பிரதிவாதி நிறுவனம்** | **முறைப்பாட்டின் தன்மை** | **பரிந்துரை வெளியிடப்பட்ட திகதி** | **மீறப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள்** | **பரிந்துரை நடைமுறைப்படுத்தப்படல் பற்றி (ஆம்✓ இல்லைx)** |
|---|---|---|---|---|---|---|
| 01 | HRC/1729/17 | ரோயல் கல்லூரி, கொழும்பு | கவனம் செலுத்தாமை | 2019.01.03 | 12(1) (2) | **x** |
| 02 | HRC/AP/475/17<br>HRC/AP/498/17 | மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழு | ஆட்சேர்ப்பு | 2019.01.03 | 12(1) | **x** |
| 03 | HRC/1983/17 | கல்வி அமைச்சு | அமுல்படுத்தாமை | 2019.01.25 | 12(1) | ✓ |
| 04 | HRC/1576/16 | வ/ப. பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | ஆட்சேர்ப்பு | 2019.01.28 | 12(1) | **x** |
| 05 | HRC/237/17 | யசோதரா தேவி பெண்கள் பாடசாலை, கம்பஹா | பாடசாலைக்குச் சேர்த்துக்கொள்ளாமை | 2019.02.08 | 12(1) | **x** |
| 06 | HRC/AM/150/15/S/EM<br>HRC/AM/72/16/T/EM | மாகாண கல்விப் பணிப்பாளர், அம்பாறை | இடமாற்றல் | 2019.02.08 | 12(1) | **x** |
| 07 | HRC/368/18 | ரோயல் கல்லூரி, | பாடசாலைக்குச் சேர்த்துக்கொள் | 2019.02.08 | 12(1) | **x** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | கொழும்பு | ளாமை | | | |
| 08 | HRC/K/105/17 | கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் | இடமாற்றல் | 2019.02.08 | 12(1) | ✓ |
| 09 | HRC/3578/17 | ரோயல் கல்லூரி, கொழும்பு | பாடசாலைக்குச் சேர்த்துக்கொள் ளாமை | 2019.02.15 | 12(1) | x |
| 10 | HRC/TCO/27/18 | திரு./ஸ்ரீ சண்முகா இந்துக் கல்லூரி - திருகோணமலை | அபாயா அணிந்து ஆசிரியைகள் பாடசாலைக்கு வருகைதரல் | 2019.02.18 | 12(1) | x |
| 11 | HRC/AM/78/15/S/ ED | அம்./ டீ.எஸ்.சேனாநாயக்க தேசிய பாடசாலை - அம்பாறை | பாடசாலைக்குச் சேர்த்துக்கொள் ளாமை | 2019.03.18 | 12(1) | x |
| 12 | HRC/398/15 HRC/1149/15 | யட்டியாந்தோட்டை பொலீஸ் நிலையம் | சித்திரவதை செய்தல் | 2019.03.22 | 11 | ✓ |

## அறிவுறுத்தல் நிகழ்ச்சிகள் (உரைகள் மூலமான உதவி)

| நிகழ்ச்சிகள் தொடர்பான விபரம் |
|---|
| 2019.01.17 ஆம் திகதி உடதுத்திரிபிட்டிய முதியோர் சங்கத்தின் அங்கத்தவர்களுக்காக உடதுத்திரிபிட்டிய முதியோர் சங்க மண்டபத்தில் நடைபெற்ற மனித உரிமைகள் சம்பந்தமாக அறிவுறுத்தும் நிகழ்ச்சிக்கு பணிப்பாளர் - கல்வி மற்றும் விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் பிரிவினால் பங்களிப்பு வழங்கப்பட்டது. |
| 2019.01.22 ஆம் திகதி இலங்கை இராணுவத்தின் மனிதாபிமானம் மற்றும் மனித உரிமைகள் பணிப்பாளர் சபையினால் சிறுபான்மையினரின் உரிமைகள் சம்பந்தமாக இராணுவ அதிகாரிகளை அறிவுறுத்துவதற்காக குக்குலேகங்கை, இலங்கை இராணுவப் பயிற்சி நிறுவனத்தில் நடாத்தப்பட்ட விரிவுரைக்கு பணிப்பாளர் - கல்வி மற்றும் விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் பிரிவினால் பங்களிப்பு வழங்கப்பட்டது. |
| 2019.03.24 ஆம் திகதி சுயாதீன ஆணைக்குழுக்கள் சம்பந்தமாக சுற்றாடல் மற்றும் சமூக அபிவிருத்தி தகவல் நிலையத்தினால் மகளிர் அமைப்புக்கள், சிவில் அமைப்புக்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் இளைஞர் யுவதிகளுக்காக இரத்தினபுரியில் நடாத்தப்பட்ட செயலமர்வில் புலனாய்வு அதிகாரி திரு.கெலீட்டஸ் அருண குமார கலந்துகொண்டார். |

## விசேட உரைகள்

| திகதி | தலைப்பு |
|---|---|
| 2019.01.09 | மனித உரிமைகள் பாதுகாப்பு பணிகள் : பண்பாடு மற்றும் பெறுமதி - நோக்கு சம்பந்தமான சிக்கல்கள் எனும் தலைப்பின் கீழ் விசேட உரையொன்றை தகவலறியும் ஆணைக் குழுவின் அங்கத்தவர் திரு. எஸ். ஜீ.புஞ்சிஹேவா அவர்களின் வளப் பங்களிப்புடன் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆளணிக்காக நடாத்தப்பட்டது. |
| 2019.03.13 | எச்.ஐ.வீ / எயிட்ஸ் காரணமாக ஒதுக்கி நோக்கும் கோட்பாடு எனும் தலைப்பின் கீழான விசேட உரை திரு.பாலித்த பண்டார அவர்களின் வளப் பங்களிப்புடன் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆளணி அங்கத்தவர்களை இலக்காகக்கொண்டு நடாத்தப்பட்டது. |
| 2019.03.27 | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆளணி அங்கத்தவர்களின் பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் சம்பந்தமான வெளிநாட்டு செயலமர்வொன்றில் கலந்துகொண்ட திருமதி குமுதுனி விதானகே, திரு.ஏ.சீ.ஏ.அசீஸ், திரு.ஏ.எஸ்.நிலந்த மற்றும் திரு. எஸ்.அருண் ஆகியோர் பெற்றுக்கொண்ட அனுபவத்தை, அறிவை பகிர்ந்துகொள்ளல் சம்பந்தமான கலந்துரையாடலொன்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆளணி அங்கத்தவர்களுக்காக நடாத்தப்பட்டது. |

**கருப்பொருள் சார்ந்த உப குழுக் கூட்டங்கள்**

| திகதி | கருப்பொருள் சார்ந்த உப குழு |
|---|---|
| 2019.01.21 | LGBTIQ நபர்களின் உரிமைகள் சம்பந்தமான உப குழுக் கூட்டம் நடாத்தப்பட்டது. |

**உள்ளகக் கூட்டங்கள்**

| கூட்டங்கள் | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் |
|---|---|---|---|
| ஆணைக்குழு பதவிநிலை உத்தியோகத்தர் கூட்டங்கள் | -- | 06 | 06, 25 |
| ஆணையாளர் சபைக் கூட்டங்கள் | 14 | -- | -- |

**பயிற்சித் திட்டங்கள்**

**I. பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிக்கும் செயலமர்வு**

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆளணிக்காக பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவித்தல் சம்பந்தமான செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டது. தலைமை அலுவலகத்தின் மற்றும் பிராந்திய அலுவலகங்களில் கல்வி மற்றும் ஏனைய செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள அவர்களது பயிற்சித் திட்டங்கள் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ இயலளவை மேம்படுத்துவதே செயலமர்வின் நோக்கமாகும். இந்த வதிவிட செயலமர்வு 2019 ஜனவரி 25 முதல் 27 வரை மூன்று நாட்கள் கம்பஹா, ஹேனேகம, நெரலு ஹொலிடே ரிசோட் இல் நடைபெற்றதுடன் விரிவுரைகள் மற்றும் செயற்பாடுகள் இரண்டு சர்வதேச பயிற்சி பெற்ற வசதி வழங்குனர்கள் மற்றும் மனித உரிமைகள் துறையில் அதிக அனுபவத்தைக் கொண்ட இரண்டு இணை வசதி வழங்குனர்களால் நடாத்தப்பட்டது.

**II. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உதவி ஆளணிக்கு மனித உரிமைகள் சம்பந்தமான பயிற்சித் திட்டம் - இரண்டாம் கட்டம்**

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உதவி ஆளணிக்கு மனித உரிமைகள் சம்பந்தமான பயிற்சித் திட்டமொன்று 2019 பெப்ரவரி 24 மற்றும் 25 ஆம் திகதிகளில் ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் நடைபெற்றது. இந்தத் திட்டத்தின் அடிப்படை நோக்கம், தலைமை அலுவலகத்தின் மற்றும் பிராந்திய அலுவலகங்களின் உதவி ஆளணிக்கு மனித உரிமைகள் தொடர்பான பயிற்சியை வழங்குவதாகும்.

**சர்வதேச மகளிர் தினம் - தலைமை அலுவலகம்**

**(i) வட்ட மேசைக் கலந்துரையாடல்கள்**

| திகதி | இடம் | இலக்காகக்கொள்ளப்பட்ட குழு |
|---|---|---|
| 2019.02.08 | தலைமை அலுவலகம், கொழும்பு | கொழும்பு மாவட்ட அங்கவீனமுற்ற நபர்களுக்கான அமைப்புக்கள் |
| 2019.02.20 | மாவட்ட செயலகம், புத்தளம் | புத்தளம் மாவட்ட அங்கவீனமுற்ற நபர்களுக்கான அமைப்புக்கள் |
| 2019.03.01 | மாவட்ட செயலகம், குருநாகல் | குருநாகல் மாவட்ட அங்கவீனமுற்ற பெண்கள் |
| 2019.03.05 | மாவட்ட செயலகம், இரத்தினபுரி | இரத்தினபுரி மாவட்ட அங்கவீனமுற்ற பெண்கள் |

**(ii) சர்வதேச மகளிர் தின வைபவம்**

2019 மார்ச் மாதம் 08 ஆம் திகதி சர்வதேச மகளிர் தினத்தை நிறைவுகூருமுகமாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் ''மதிப்புமிக்க வாழ்க்கையொன்றுக்காக பிரதான கட்டமைப்புக்கு கொண்டுவரல்'' எனும் தொனிப் பொருளின் கீழ் அங்கவீனமுற்ற பெண்களின் உரிமைகள் சம்பந்தமான

வட்டமேசைக் கலந்துரையாடலொன்று கொழும்பு 07, இலங்கை மன்றக் கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்டது. அங்கு கல்வி, சுகாதாரம், வேலை வாய்ப்பு, குடும்ப அலுவல்கள் போன்ற நான்கு பிரிவுகளின் கீழ் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வலய மட்டத்தில் நடைபெற்ற வட்டமேசை கலந்துரையாடல்களின்போது எழுந்த கருத்துக்கள் சம்பந்தமாக மேலும் கலந்துரையாடப்பட்டது. மகளிர் தின வைபவத்தில் பிரதம அதிதியாக மருத்துவர் 'சிக்கா ஜயலத் கலந்து கொண்டார். வட்ட மேசைக் கலந்துரையாடலை பேராசிரியர் திருமதி சந்திரா குணவர்தன மற்றும் சட்டத்தரணி திருமதி தனுஜா நவரத்ன ஆகியோர் வழிநடாத்தினர்.

## நடமாடும் சேவை / ஏனைய திட்டங்கள்

| திகதி | தலைப்பு |
|---|---|
| 2019.03.10 | களுத்துறை, தொடங்கொட, கொஸ்வத்த ஜனாதிபதி வித்தியாலயத்தில் தேசிய ஒருமைப்பாடு மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சினால் நடாத்தப்பட்ட நிகழ்ச்சியில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு பங்கேற்றது. |
| 2019.03.24 | கொழும்பு - 15, மோதரை இந்துக் கல்லூரியில் தேசிய ஒருமைப்பாடு மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சினால் நடாத்தப்பட்ட நிகழ்ச்சியில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பங்கேற்றது. |
| 2019.03.30 | இலங்கை குடும்ப அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட LGBTIQநபர்கள் சம்பந்தமாக மனித உரிமைகள் உப குழுவினால் எடுக்கப்பட்ட செயற்பாடுகள் சம்பந்தமான கலந்துரையாடல். |
| 2019.03.31 | அவிஸ்ஸாவலை, புனித மேரி வித்தியாலயத்தில் தேசிய ஒருமைப்பாடு மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சினால் நடாத்தப்பட்ட நிகழ்ச்சியில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பங்கேற்றது. |

## அங்கவீனமுற்ற நபர்களுக்கு அரச கட்டிடங்கள் மற்றும் போக்குவரத்து வசதிகளுக்காக பிரவேசிக்க முடியுமான வகையில் வசதிகளை ஏற்பாடு செய்வதற்காக வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்தல்

உள்நாட்டுச் சட்டங்களுக்கிணங்க அங்கவீனமுற்ற நபர்களுக்கு அரச கட்டிடங்கள் மற்றும் போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்தல் சம்பந்தமாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கௌரவ நிதியமைச்சர் மங்கள சமரவீர அவர்களுக்கு 2019.01.10 ஆம் திகதி பரிந்துரைகளை முனவைத்துள்ளது.

## அங்கவீனமுற்ற நபர்கள் தொடர்பான சட்ட உருவாக்கம், இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் பரிந்துரை

மனித உரிமைகள் ஆணைக்குழுவினால்அங்கவீனர்களுக்கான உரிமைகள் சம்பந்தமான சட்ட மூலம் சம்பந்தமாக ஆணைக்குழுவின் பரிந்துரைகள் 2019.01.29 ஆம் திகதி சமூக வலுவூட்டல் அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளும் அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகள் ஆணைக்குழுவின் கருப்பொருள் சார்ந்த உப குழுவுடன் கலந்துரையாடி இந்தப் பரிந்துரைகள் தயாரிக்கப்பட்டன.

## மனித உரிமைகள் வெளியீடுகள்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அச்சிடப்பட்ட மனித உரிமைகள் வெளியீடுகள், துண்டுப் பிரசுரங்கள் மற்றும் சுவரொட்டிகளை பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள், இராணுவ மற்றும் பொலீஸ் உத்தியோகத்தர்கள், அரசாங்க நிறுவனங்களின் ஆளணிகள், அரச சார்பற்ற அமைப்புக்களின் அங்கத்தவர்கள் ஆணைக்குழுவுக்கு வந்து பெற்றுக்கொள்வதுடன் அவ்வாறு வருகை தரும் நபர்களுக்கு மனித உரிமைகள் சம்பந்தமான அறிவுறுத்தல் கலந்துரையாடல்களை நடாத்துதல்.

## பிராந்திய அலுவலகங்கள்

### உரைக்கான உதவி

| பிராந்திய அலுவலகம் | இலக்காகக் கொள்ளப்பட்ட குழு | | | | |
|---|---|---|---|---|---|
| | இராணுவ அதிகாரிகள் | பொலீஸ் அலுவலர்கள் | பொது மக்கள்/ சிவில் அமைப்புக்கள்/மதத் தலைவர்கள்/ ஏனையவை) | மாணவர்கள்/ இளைஞர் குழுக்கள் | சிவில் பாதுகாப்புப் படை |
| மாத்தறை | - | 1 | 3 | 1 | - |
| கண்டி | - | 1 | - | - | - |
| திருகோணமலை | - | - | - | 1 | - |
| அனுராதபுரம் | 2 | 2 | - | - | - |
| அம்பாறை | - | 2 | 1 | 1 | - |
| பதுளை | - | 1 | 1 | - | - |
| மட்டக்களப்பு | - | - | 2 | - | - |
| வவுனியா | 4 | - | - | - | 1 |

### அறிவுறுத்தல் மற்றும் பயிற்சித் திட்டங்கள்

| பிராந்திய அலுவலகங்கள் | இலக்காகக்கொள்ளப்பட்ட குழு | | |
|---|---|---|---|
| | அரச உத்தியோகத்தர்கள் | மாணவர்கள்/ இளைஞர் குழுக்கள் | பொது மக்கள்/ சிவில் அமைப்புக்கள்/மதத் தலைவர்கள்/ ஏனையவை) |
| கண்டி | - | - | 1 |
| பதுளை | - | - | 1 |
| கல்முனை | 1 | - | - |
| மட்டக்களப்பு | - | 1 | - |
| வவுனியா | - | 1 | 3 |

### நடமாடும் சேவை / ஏனைய நிகழ்ச்சிகள்

| பிராந்திய அலுவலகம் | தலைப்பு |
|---|---|
| கண்டி | 2019.02.10ஆம் திகதி தேசிய ஒருமைப்பாடு மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட நடமாடும் சேவையில் கலந்துகொள்ளல் |
| | 2019.02.19ஆம் திகதி சிவில் சமூகத்தினருக்கான கூட்டம் நடாத்தப்பட்டது. |
| யாழ்ப்பாணம் | 2019.02.23ஆம் திகதி ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களின் உரிமைகள் தொடர்பான கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது. |
| | 2019.03.01ஆம் திகதி மீள் குடியேற்றம் தொடர்பான சிக்கல்களை கண்டறிவதற்காக கிளிநொச்சி இரணைத் தீவில் விசேட விஜயமொன்று மேற்கொள்ளப்பட்டது. |
| | 2019.03.21ஆம் திகதி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ளப்பட்டது. |

### சர்வதேச தினக் கொண்டாட்டம்

சர்வதேச மகளிர் தினத்துடன் இணையான வகையில் சகல பிரதேச செயலகங்களிலும் அங்கவீனமுற்ற பெண்களின் உரிமைகள் சம்பந்தமான வட்டமேசைக் கலந்துரையாடல் நடாத்தப்பட்டு தமது பிரதேசத்தில் அங்கவீனமுற்ற பெண்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் இனங்கண்டுகொள்ளப்பட்டது. அது தவிர மாத்தறை, திருகோணமலை, யாழ்ப்பாணம், அம்பாறை, கல்முனை, பதுளை, கண்டி மற்றும் மட்டக்களப்பு பிராந்திய அலுவலகங்களினால் சர்வதேச மகளிர் தினத்தை நினைவுகூரும் நிகழ்ச்சியொன்றும் நடாத்தப்பட்டது.

## பட்டதாரி / பட்டதாரி தேர்வுநாடி பயிலுனர்களுக்கான பயிற்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

03 மாத கால பயிற்சித் திட்டமொன்றுக்காக பயிலுனர்களை ஆட்சேர்த்துக்கொள்ளும் அலுவல் இங்கு மேற்கொள்ளப்படும். இந்த ஆட்சேர்ப்புக்களுடன் தொடர்பான அறிவித்தல் ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படுவதுடன், அதற்கு மேலதிகமாக பட்டங்களை வழங்கம் நிறுவனங்களுக்கு தபால் மூலமாக விண்ணப்பங்களை அனுப்புமாறு அறிவிக்கப்படும். தலைமை அலுவலகம் மற்றும் பிரதேுச அலுவலகங்கள் ஊடாக நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சைகளின் ஊடாக தெரிவு செய்யப்படும் பயிலுனர்கள் இதற்காக ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

அதற்கமைய இந்த ஆண்டின் முதலாவது காலாண்டிற்காக**தலைமை அலுவலகத்திற்கு 22 பேரும் பிராந்திய அலுவலகங்களுக்கு 13 பேரும்** பயிலுனர் பயிற்சிக்காக இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

## கலந்துகொண்ட கூட்டங்கள் / கலந்துரையாடல்கள் மற்றும் நிகழ்ச்சிகள்

| திகதி | கூட்டம் | பங்கேற்ற அலுவலர் |
|---|---|---|
| 2019.01.31 | சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக கொத்து ஆயுதங்களைப் பயன்படுத்துவதனை தடுத்தல் சம்பந்தமான ஒரு நாள் செயலமர்வொன்று கொழும்பில் நடாத்தப்பட்டது. வெளிநாட்டலுவல்கள் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டு இதற்கான அழைப்பு விடுக்கப்பட்டது. | பணிப்பாளர் - ஆராய்ச்சி மற்றும் மேற்பார்வை (பதில் கடமை) |
| 2019.03.05 | 2019 மகளிர் தின நிகழ்ச்சிக்காக இரத்தினபுரி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அங்கவீனமுற்ற நபர்களை இனங்கண்டு கொள்வதற்கான கூட்டம். இந்தக் கூட்டம் இரத்தினபுரி மாவட்ட செயலக வளவில் நடாத்தப்பட்டது. அதற்காக இரத்தினபுரி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அங்கவீனமுற்ற பிரஜைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிவில் அமைப்புக்கள் மற்றும் அங்கவீனமுற்ற பிரஜைகளின் பங்களிப்பை காணக்கூடியதாக இருந்தது. | பணிப்பாளர் - ஆராய்ச்சி மற்றும் மேற்பார்வை (பதில் கடமை) |
| 2019.03.18 மற்றும் 2019.03.19 | சிறுவர் பாலியல் துப்ரயோகம் மற்றும் சுரண்டல், இணையத்தளத்தினுள் பாதுகாப்பு சம்பந்தமான தேசிய அமர்வு மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் உதவியுடன் கொழும்பில் நடாத்தப்பட்டது. | பணிப்பாளர் - ஆராய்ச்சி மற்றும் மேற்பார்வை (பதில் கடமை) |
| 2019.03.28 | இலங்கையின் சமூக பொருளாதார கொள்கைகளினால் ஆடைக் கைத்தொழில் துறையில் பணியாற்றும் ஊழியர்களுக்கு ஏற்படும் தாக்கம் சம்பந்தமான செயலமர்வொன்று 'டாபிந்து' கூட்டினால் ஏற்பாடு செய்யப்பட்டு கொழும்பில் நடாத்தப்பட்டது. ஆடைக் கைத்தொழில் துறை பெண் ஊழியர்கள், அவர்கள் தொடர்பாக செயற்படும் சிவில் அமைப்புக்கள் மற்றும் இந்தப் பெண் ஊழியர்களுக்கு சேவைகளை வழங்குவதற்கான பொறுப்பைக் கொண்டுள்ள தரப்புக்கள் செயலமர்வில் கலந்து கொண்டன. | பணிப்பாளர் - ஆராய்ச்சி மற்றும் மேற்பார்வை (பதில் கடமை) |

### ஆராய்ச்சி மற்றும் மேற்பார்வைப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட விசேட விடயங்களைக் கண்டறியும் செயற்பாடுகள் /கள ஆய்வுகள்

| திகதி | தலையிடக் காரணமாகிய பிரச்சினை |
|---|---|
| 2019.01.23 | மஸ்கெலியா பிரதேசத்தில் சுகாதாரப் பிரிவில் நிலவும் சிக்கல்களை இனங்கண்டுகொள்ளும் நோக்கில் விடயங்களைக் கண்டறியும் செயற்பணி நடாத்தப்பட்டது. இங்கு மஸ்கெலியா அரசாங்க மருத்துவமனை, மஸ்கெலியா பிரதேச வைத்திய அதிகாரி அலுவலகம், நல்லதண்ணி அவசர முதலுதவிப் பிரிவு போன்ற இடங்கள் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுடன் சுகாதாரம் சார்ந்த பிரச்சினைகள் சம்பந்தமாக பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தப்படும் சிவில் அமைப்புக்களிடமிருந்து தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. இந்தப் பணி கல்வி மற்றும் விசேட நிகழ்ச்சிப் பிரிவுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டது. |

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் இணையத்தளப் பக்கத்தை நிகழ்நிலைப்படுத்தல்

| திகதி | நிகழ்நிலைப்படுத்தல் |
|---|---|
| 2019.01.18 | 2018 நவம்பர் மாதம் அங்குணகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் சிறைக் கைதிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பந்தமாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட அறிக்கை |
| 2019.01.21 | 2019 வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளில் அங்கவீனமுற்ற நபர்கள் தொடர்பாக மற்றும் அவர்களது போக்குவரத்து வசதிகளுக்காக நிதியை ஒதுக்கீடு செய்யுமாறு நிதியமைச்சரிடம் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் விடுக்கப்பட்ட கோரிக்கை |
| 2019.01.30 | அங்குணகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் சிறைக் கைதிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பந்தமாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும் விசாரணை தொடர்பாக பிழையான தகவல்கள் 'மவ்பிம' பத்திரிகையில் பிரசுரமாகியமை சம்பந்தமாக அதன் பிரதம ஆசிரியருக்கு அனுப்பிய கடிதம். |
| 2019.02.02 | 2019.01.20 ஆம் திகதி 'இருதின' பத்திரிகையில் ஆணைக்குழு சம்பந்தமாக வெளியிடப்பட்ட தகவல் சம்பந்தமாக அதன் பிரதம ஆசிரியருக்கு அனுப்பிய கடிதம். |
| 2019.02.08 | 2019.02.06 ஆம் திகதி கௌரவ ஜனாதிபதியவர்கள் பாராளுமன்றத்தில் வெளியிடப்பட்ட கூற்று சம்பந்தமாக அவருக்கு அனுப்பிய கடிதம் |
| 2019.03.11 | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் 2019 ஆம் ஆண்டின் மகளிர் தின வைபவம் சம்பந்தமாக ளுரனெயல வுைஅநளபத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கடிதத்தை மீண்டும் பிரசுரித்தல். |
| 2019.03.11 | 2019.02.21 ஆம் திகதி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சம்பந்தமாக கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சிசிர ஜயகொடி அவர்களால் வெளியிடப்பட்ட கூற்று சம்பந்தமாக சபாநாயகர் அவர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதம் |
| 2019.03.21 | ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட கூற்றுக்கள் |
| 2019.03.22 | 2019 ஆண்டிற்கானவரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளில் அங்கவீனமுற்ற நபர்கள் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் சம்பந்தமாக மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நிதியமைச்சருக்கு நன்றியறிதலைத் தெரிவித்தல் |

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செய்திகள் / விசேட பரிந்துரைகள் / விசேட தலையீடுகள் சம்பந்தமாக வெளித்தரப்பினருக்கு அறிவுறுத்தல்

இங்கு அச்சு ஊடகங்கள், இலத்திரணியல் ஊடகங்கள், இணையத்தளச் செய்திகள், சிவில் அமைப்புக்கள், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கருப்பொருள் சார்ந்த உப குழு அங்கத்தவர்கள், இலங்கையின் தூதுவராலயங்கள், மனித உரிமைகள் அமைப்புக்கள், ஆசிய பசுபிக் பிராந்திய தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுக்கள் கூட்டமைப்பின் தொடர்பாடல் வலையமைப்பு மற்றும் ஆசிய பசுபிக் பிராந்திய தேசிய மனித உரிமைகள் நிறுவனங்கள் கூட்டமைப்புடன் இந்தத் தகவல்களை பகிர்ந்துகொள்ளப்படுகின்றது. அனைத்து நிகழ்நிலைப்படுத்தல்களின் பின்னர் இவ்வாறு தகவல்கள் அனுப்பப்படுகின்றன.

அனைத்து நிகழ்நிலைப்படுத்தல்களின் பின்னர் ஆணைக்குழுவின் அனைத்து பிரதேச அலுவலகங்களுக்கும் இந்தத் தகவல்கள் அனுப்பப்படுவதுடன் அந்தத் தகவல்கள் அலுவலக அறிவித்தல் பலகைகளில் பொது மக்கள் பார்வைக்காக விடுமாறு ஆலோசனை வழங்கப்படுகின்றது.

தலைமை அலுவலகத்திற்கு மற்றும் பிராந்திய அலுவலகங்களுக்குச் சொந்தமான இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களின் ஊடாக பிரசுரிக்கப்படும் மனித உரிமைகள் மீறல்களுடன் தொடர்புடைய செய்தி அறிக்கைகள் தொடர்பாக ஊடக மேற்பார்வையொன்றை மேற்கொண்டு உரிய பிரதிவாதித் தரப்பினரிடமிருந்து அறிக்கைகளைக் கோருதல் மற்றும் அதன் முன்னேற்றம் சம்பந்தமான பின்தொடர் நடவடிக்கைகளை மெற்கொள்ளல்.

## வெகுசன ஊடகங்களில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சம்பந்தமாக பிரசுரிக்கப்பட்ட அறிக்கைகள்

1. அங்கவீனமுற்ற நபர்களின் பிரவேசத்திற்கான உரிமையை உறுதிப்படுத்துவதற்காக வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக நிதியை ஒதுக்கீடு செய்யுமாறு நிதியமைச்சுக்கு அனுப்பிய

கடிதம் சம்பந்தமாக 2019.01.21மற்றும் 2019.01.27 ஆகிய தினங்களில் ‘சன்டே ஒப்சவர்’,‘சன்டே டய்ம்ஸ்’,‘த ஐலன்ட்’ ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

2. அங்கவீனமுற்ற நபர்களின் பிரவேசத்திற்கான உரிமையை உறுதிப்படுத்துவதற்காக வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக நிதியை ஒதுக்கீடு செய்யுமாறு நிதியமைச்சுக்கு அனுப்பிய கடிதம் சம்பந்தமாக கொலொம்பொ டெலி கிராப், கொலொம்பொ பேஜ், கொலொம்பொ கெசட் ஆகிய செய்தி இணையத்தளங்களில் 2019.01.21 ஆம் திகதி செய்திகள் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

3. இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தலைவர் கலாநிதி திருமதி தீபிக்கா உடகம அவர்களுடனான நேர்முகக் கலந்துரையாடல் 2019.03.10 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வீரகேசரிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

4. அங்கவீனமுற்ற பெண்கள் கௌரவமான வாழ்க்கையொன்றைக் கழித்தல் எனும் தொனிப் பொருளில் ஆணைக் குழுவினால் நடாத்தப்பட்ட சர்வதேச மகளிர் தின நிகழச்சி அறிக்கையொன்று 2019.03.10ஆம் திகதி சன்டே டய்ம்ஸ் பத்திரிகையில் பிரசுரமாகியது.

## தலைவர் மற்றும் ஆணையாளர்கள் கலந்துகொண்ட கலந்துரையாடல்கள் / நிகழ்ச்சிகள்

| | திகதி | விபரம் |
|---|---|---|
| 1 | 2019.01.01 | புதிய உள்ளகப் பயிலுனர்களை நோக்குநிலைத் திட்டம் |
| 2 | 2019.01.04 | ஐக்கிய நாடுகள் அமைப்பின் அமைதிப் படையில் பணியாற்றுவதற்காக வெளிநாடு செல்லும் இராணுவத்தினரின் சான்றளிப்பு நடவடிக்கையுடன் தொடர்பான விடயங்களை கலந்துரையாடுவதற்காக கௌரவ சபாநாயகருடனான கலந்துரையாடல் - இலங்கைப் பாராளுமன்றம் |
| 3 | 2019.01.16 | தேசிய மனித உரிமைகள் செயல் திட்டம் - பெப்ரவரி, நல்லிணக்கப் பொறிமுறை ஒருங்கிணைப்பு செயலகம், கொழும்பு 02. |
| 4 | 2019.01.18 | இலங்கை பொருளாதார அமைப்பின் கற்றறிந்தோர் மாநாடு - 2019 இலங்கை மத்திய வங்கி வங்கியியல் கற்கை கேட்போர்கூடம், ராஜகிரிய. |
| 5 | 2019.01.25 | மனித உரிமைகள் மேம்பாடு சம்பந்தமாக மனித உரிமைகள் ஆணைக் குழுவின் கடமைகள், நெரலு ஓய்வு விடுதி, ஹோனேகம. |
| 6 | 2019.01.25 | அவுஸ்திரேலிய தினம் - அவுஸ்திரேலியா மாளிகை. |
| 7 | 2019.01.30 | ஐக்கிய நாடுகள் அமைப்பின் அமைதிப் படையில் பணியாற்றுவதற்காக வெளிநாடு செல்லும் இராணுவத்தினரின் சான்றளிப்பு நடவடிக்கையுடன் தொடர்பான விடயங்களை கலந்துரையாடுவதற்காக கௌரவ சபாநாயகருடனான கலந்துரையாடல் - இலங்கைப் பாராளுமன்றம் |
| 8 | 2019.01.31 | கொத்து யுத்த உபகரணங்கள் இணக்கப்பாடு உள்ளக சட்டத்தை சட்டமயப்படுத்தல் சம்பந்தமான ஒரு நாள் பயிற்சிப் பட்டறை - சினமன் லேக் சைட் ஹோட்டல் |
| 9 | 2019.01.31 | மனித உரிமைகள் மற்றும் சகவாழ்வு சம்பந்தமாக மனித உரிமைகள் ஆணைக் குழுவின் நோக்கங்கள் மற்றும் கடப்பாடுகள் (பொதுக் கருத்துக் கணிப்பு) கூட்டம் - மாவனல்லை பிரதேச சபை கேட்போர்கூடம் |
| 10 | 2019.02.01 | நிதி ஆணைக் குழு, புதிய கட்டடித்திற்குச் செல்லுதல் |
| 11 | 2019.02.02 | இலங்கை மருத்துவ சட்ட சங்கத்தின் பிரதம அதிதி மற்றும் பிரதம பேச்சாளராக - ஒபியுலன்ட் ரிவர் பேஸ் ஹோட்டல் |
| 12 | 2019.02.14 | ஜனநாயக யுகத்திற்கான செயற்பணியின் முப்பது வருட கடந்த காலத்தை (ஒத்துழைப்பு, குடியுரிமை மற்றும் ஜனநாயகம்) நினைவுகூருதல் - பெபரல் அமைப்பு - பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம் |

| | | |
|---|---|---|
| 13 | 2019.03.05 | நோர்வே வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் இராஜாங்க செயலாளர் உட்பட்ட அலுவலர்களுடனான கலந்துரையாடல் - காலிமுகத்திடல் ஹோட்டல் |
| 14 | 2019.03.05 | "இலங்கையின் தற்போதைய மனித உரிமைகள் நிலைமை"சம்பந்தமாக ஜப்பான் தூதுவராலயத்தின் பிரதி தூதுவராலயப் பிரதானி மற்றும் அரசியல் ஆலோசகருடனான கலந்துரையாடல் -இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு |
| 15 | 2019.03.08 | சர்வதேச மகளிர் தின வைபவம் - இலங்கை மன்றக் கல்லூரி |
| 16 | 2019.03.08 | "விமர்ரீ"இதழாசிரியர் பகுதி ஆக்கங்கள் ஏடு (மனிதாபிமானப் பிரச்சினைகளை அறிக்கைப்படுத்தும்போது ஊடகங்களின் பொறுப்பை நிறைவேற்றிய விதம்) வெளியீடு - திருமதி சீதா ரஞ்சனி |
| 17 | 2019.03.09 | காணாமற்போனோர் அலுவலகத்தின் அழைப்பின்பேரில் கலாநிதி லுயிஸ் பொன்டேப்ரிடரின் உண்மையைத் தேடிய விஞ்ஞான ஆய்வின்போது மனிதாபிமானத்தை மதித்தல் பற்றிய உரை - பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம் |
| 18 | 2019.03.12 | நல்லிணக்கப் பொறிமுறைக்கான ஒருங்கிணைப்பு செயலகம் - தேசிய மனித உரிமைகள் செயல் திட்டம் - மிலோதா நிறுவனம் |
| 19 | 2019.03.13-16 | ஐக்கிய நாடுகள் அமைப்பின் வர்த்தக மற்றும் மனித உரிமைகள் சம்பந்தமான ஆரம்ப தெற்காசிய ஒன்றியம் - புதுடில்லி, இந்தியா |
| 20 | 2019.03.18 | இலஞ்ச ஆணைக் குழு - இலஞ்சம் மற்றும் ஊழலைத் தடுப்பதற்கான தேசிய செயல் திட்டத்தை வெளியிடல் - செங்ரிலா ஹோட்டல் |
| 21 | 2019.03.21 | ஆசிய பசுபிக் பிராந்திய அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட பிராந்திய நீதிமன்றக் கல்வியலாளர் மாநாட்டில் உரை நிகழ்த்ததல் - ஜெட்விங் ஹோட்டல், கொழும்பு. |
| 22 | 2019.03.27 | வெளிநாட்டலுவல்கள் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஐக்கிய நாடுகள் அமைப்பின் சித்திரவதையை தடுத்தல் சம்பந்தமான உப குழுவுடன் நடைபெற்ற கலந்துரையாடல் - குழு (SPT)அறை, இலங்கை பாராளுமன்றம். |

## நிதியறிக்கை

| | |
|---|---|
| **ஆரம்ப மீதி** | 0.00 |
| **பொதுத் திறைசேரியிடமிருந்து கிடைத்த கட்டுநிதி** | |
| மீண்டெழும் | **50,900,000.00** |
| மூலதனம் | **3,200,000.00** |
| ஏனைய வருமானங்கள் | **29,596.10** |
| மொத்தம் | **54,129,596.10** |
| **செலவுகள்** | |
| ஆளுக்கான வேதனாதிகள் | **29,258,834.74** |
| பயணச் செலவுகள் | **198,746.00** |
| வழங்கல்கள் | **1,180,919.83** |
| பராமரிப்புச் செலவுகள் | **865,994.48** |
| சேவைகள் | **15,037,378.64** |
| மாற்றல்கள் | **633,638.01** |
| மனித உரிமைகள் நிகழ்ச்சித் திட்டங்கள் | **2,990,617.65** |
| புனரமைப்பு மற்றும் மூலதனச் சொத்துக்கள் மேம்பாடு | **--** |
| மூலதனச் சொத்துக்கள் கொள்வனவு | **197,325.00** |
| ஆற்றல் விருத்தி(இயலளவு மேம்பாடு) | **1,021,458.25** |
| இலங்கையில் சமாதானத்தை கட்டியெழுப்புவதற்காக ஊக்குவிப்பு உதவி (UNDP) | **229,122,55** |
| நாட்டிற்கு திரும்பி வருபவர்களுக்கு தமது உரிமைகளை அனுபவிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்தல்(ருரேஊசு) | **--** |
| மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இயலளவைப் பலப்படுத்தல்(SWISS) | **--** |
| **மொத்தச் செலவு** | **51,614,035.15** |